[1991 சனவரி 25

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு விபத்திலே இறந்து போகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் தற்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற திட்டப்படி அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கக் கூடிய ஒரு திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் மருத்துவப் பரிசோதனை பொறுத்தவரையில் ஆங்காங்கு சாலைப் பாதுகாப்பு வார விழாவின்போது சில மாவட்டங்களில் செய்திருக்கின்றார்கள். பல மாவட்டங்களில் அது நடைமுறைக்கு வரவில்லை. வருகின்ற ஆண்டில், வருகின்ற மார்ச் மாதத்தில் சாலைப் பாதுகாப்பு வார விழா என்று கொண்டாடும்போது எல்லா மாவட்டங்களிலும் திட்டமிட்டு ஆங்காங்கே இருக்கக்கூடிய பெரிய மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், தனியார் சேவை நிறுவனங்கள் இவைகளையெல்லாம் ஒருங்கிணைத்து இப்படிப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

அனுமதி பெறாத மனைப் பிரிவுகளிலுள்ள வீடுகளுக்கு அங்கீகாரம்

* 9182—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகுஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அனுமதி பெறாத மனைப் பிரிவுகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு வரி மட்டும் வசூல் செய்யும் உள்ளாட்சிகள், அவைகளுக்குச் சாலைகள், விளக்குகள், குடிநீர் போன்ற வசதிகள் செய்து மனைகளை அங்கீகாரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

19—4—1989 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 1—1—1989 ஆம் தேதியில் சொத்து வரி வசூலிக்கப்படுகிற அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகள் அனைத்தையும் நகராட்சிகள் எடுத்துக் கொண்டு அந்த மனைப் பிரிவுகளில் குடியிருப்போருக்கு சாலை வசதி, விளக்கு வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்புகள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

1991 சனவரி 25]

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அனுமதி இல்லாத குடியிருப்புகளில் வீடு கட்டுபவர்களை உள்ளாட்சி மன்றங்கள் எதுவும் ஆரம்பத்தில் தடுப்பதில்லை. ஆனால் கட்டி முடித்துவிட்ட பின்னால் வரியும் வசூலித்துவிட்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்படாமல் இருப்பதால், அரசால் விரைந்து அந்த திட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட நிலை அதிகமாக நீடிக்கவில்லை. ஏற்கெனவே 10, 15 ஆண்டுகளாக இப்படி அனுமதி இல்லாமல் கட்டிய கட்டிடங்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்திற்காகவும், பொது மக்களுடைய வசதியை ஒட்டி பல உறுப்பினர்கள் இதே அவையில் சொல்லிய கருத்தையும் பரிசீலித்து இப்படிப்பட்ட நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் அதைப்பற்றி பிறகு ஆலோசித்து கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த நிலை குறைந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்கள் வரையிலாவது, அந்தக் காலவரையறை வரையிலாவது விரைந்து செயல்படுத்த அரசு ஆணையிடுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆரம்பப் பதிலிலேயே தெரிவித்திருக்கிறேன். இதுவரையில் அவ்வாறு பாதிக்கப்பட்டிருந்தாலும், இனிமேல் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதையொட்டி அது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் தருவாயில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9.25 மணி

கொளத்தூரில் மார்க்கெட்டிங் சொசைட்டி

**8289*—திரு. மா. சீரங்கன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கொளத்தூர் பகுதியில் மிளகாய் அதிகமாக சாகுபடி செய்து வருகின்ற விவசாயிகள் மார்க்கெட்டிங் சொசைட்டி இல்லாமல் அவதிப்படுவதை அரசு அறியுமா?